<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>
<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>
<u>MCOP . No.30/2025</u>

**<u>நாள் :11.03.2026</u>**

**எ.ம.சா.** 1 (எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ஜீவா | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.உமபாதி | வயது | : | 49 |
| ஊர் | : | ஆலங்காயம் | தொழில் | : | அரசு பேருந்து ஓட்டுநர் |
| வட்டம் | : | வாணியம்பாடி | தேசியம் | : | இந்தியன் |

நான் இந்த வழக்கில் எதிர்மனுதாரரான அரசு பேருந்து ஓட்டுநர் ஆவேன். விபத்து சமயத்தில் அரசு பேருந்தை ஓட்டி வந்தவர் என்ற முறையில் வழக்கு விவரங்கள் எனக்கு பரிட்சயம். இந்த வழக்கிற்கான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

விபத்து சம்பந்தமாக ஜோலார்பேட்டை காவல் நிலைய குற்ற எண்.428/2024ன் கீழ் முதல் தகவல் அறிக்கை எனக்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் முழுமையான விசாரணைக்கு பின்னிட்டு எனக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செட்யயப்பட்டது என்றால் சரிதான். நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 திருப்பத்தூர் அவர்களால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு வழக்கு விசாரணை நடந்து வருகிறது. மனுதாரர் நான் ஓட்டிச் சென்ற பேருந்தில் பயணித்தார் என்றால் சரிதான். அப்போதுதான் அவருக்கு காயம் ஏறபட்டது என்றால் சரிதான். நான்தான் அரசு

பேருந்தை கவனக்குறைவாக ஓட்டிச்சென்று புளியமரத்தின்மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. எனது கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதால் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியபடி இருசக்கர வாகனத்தில் வந்தவர் போன் பேசிக்கொண்டு வந்த நிலையில் விபத்தை தவிர்க்கவேண்டி புளியமரத்தின்மீது மோதியதாக சொல்வது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.